[பேரவைத் தலைவர்] [2020 மார்ச் 9

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. கே.பி.பி. சாமி, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இரண்டாம் முறையாக 2016 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராக சிறப்பாகச் செயல்பட்டவரும், 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை மீன் வளத் துறை அமைச்சராக பாராட்டக்கூடிய வகையில் பணியாற்றியவரும், அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவையும், அன்பையும் பெற்றவரும், இனிய பண்பும் செயல்திறனும் கொண்டவருமான திரு. கே.பி.பி. சாமி அவர்கள் 27-2-2020 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இப்பெருந்தகையின் மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(ஆ) திரு. S. காத்தவராயன், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "2019 ஆம் ஆண்டு குடியாத்தம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவரும், எளிமையும், இனிய பண்பும், கடமை உணர்வும் தன்னகத்தே கொண்டு திறம்படச் செயலாற்றியவருமான திரு. S. காத்தவராயன் அவர்கள்,

2020 மார்ச் 9] [பேரவைத் தலைவர்]

28-2-2020 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இப்பெருந்தகையின் மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

(இ) பேராசிரியர் க. அன்பழகன், முன்னாள் அமைச்சர் மற்றும் அவை முன்னவர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *"திராவிட இயக்கத்தின் கொள்கைகளில் ஆழமான நம்பிக்கை கொண்டவரும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., கலைஞர் திரு. மு. கருணாநிதி ஆகியோரோடு அரசியலில் பயணித்தவரும், பகுத்தறிவுக் கொள்கைகளை தன் இறுதி மூச்சு வரை சிறிதும் பிறழாமல் கடைபிடித்தவரும், சமூக நீதிக்காகவும், மொழி உரிமைக்காகவும் பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டவரும், 1957 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை 9 முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், 1962 முதல் 1967 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1967 முதல் 1971 வரை திருச்செங்கோடு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களவை உறுப்பினராகவும், இப்பேரவையில் அவை முன்னவராகவும், மக்கள் நல்வாழ்வு, கல்வி, நிதி ஆகிய துறைகளின் அமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றியவருமான பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 7-3-2020 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

முற்பகல் 10–05

தமிழ்ப் பற்றும், தேசிய உணர்வும் கொண்ட குடும்பத்தில் உதித்த பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், எளிமை, அடக்கம், இரக்கம் என உயர்ந்த பண்புகளை இயற்கையாகவே தன்னகத்தே பெற்றுத் திகழ்ந்தவர். கல்லூரிப் பேராசிரியராக தன்னுடைய பணியைத் தொடங்கி, தமிழர் வாழ்வு, தமிழ் மொழி இலக்கியம்,